Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 8 ஆம் நாள் ஷஃபான் பிறை 17 22 12-64 செவ்வாய்க்கிழமை இதழ் 313

நத்தார்
புதுவருட
விசேஷ
மலிவு விற்பனை
இரத்தினம்ஸ்
பிடவை மாளிகை
180 கே. கே. எஸ் ரோட் யாழ்ப்பாணம்

தேர்தலில் நிற்கும் அரசியல் கட்சிகள்

24-ம் திகதிக்குமுன் அங்கீகாரம்பெறவேண்டும்

கொழும்பு, திங்கள்

பொதுத் தேர்தலில் கட்சிரீதியில் போட்டியிட விரும்பும் அரசியல் கட்சிகள் இம் மாதம் 24-ம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் தங்கள் கட்சிகளை அங்கீகரிக்கப் பட்ட கட்சிகளாகப் பதிவு செய்து கொள்வதற்கு தேர்தல் கமிஷனருக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். 24-ம் திகதிக்குப் பின்னர் மனுச் செய்யும் கட்சிகள் அங்கீகரிக்கப்படமாட்டா.

தபால்மூலம் வாக்களிப்பு

தபால்மூலம் வாக்களிப்பதற்கு அனுமதி கோருவோர் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் திகதிக்கு முன்னர் மனுச் செய்து கொள்ள வேண்டும். பார்லிமெண்டரித் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் அனைவருக்கும் மற்றும் அத்தியாவசிய சேவைகளிலுள்ளோருக்கும் தபால்மூலம் வாக்களிக்கும் வசதி வழங்கப்படும். தபால்மூலம் வாக்களிக்க விரும்புவோர் அனைவரும் அந்தந்த தேர்தல் தொகுதி வாக்குப்பதிவு அதிகாரிகளுக்கு மனுச்செய்ய வேண்டும். சாதாரணமாக ஒவ்வொரு இலாகாவின் தலைவர்களுக்கு முன்னிலையில் இரகசியமாக வாக்களிக்க தபால்மூலம் வாக்களிப்போர் அனுமதிக்கப்படுவர்.

பஸ் சாரதிகளுக்கும் வசதி

தபால் மூலம் வாக்களிப்பதற்கு பஸ்சாரதிகளுக்கும், பஸ் கண்டக்டர்களுக்கும் அனுமதி வழங்குவதுபற்றியும் ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது. இதுசம்பந்தமாக தேர்தல் கமிஷனருடன் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேச்சுவார்த்தை நடாத்திவருகிறது.

கிரிக்கெட் டெஸ்ட்

இலங்கை 1-ம் இன்னிங்ஸ் 280

2-ம் இன்னிங்ஸ் 3-196

ஜயசிங்கா 78 ஓட்டங்கள்

ஹைதராபாத், டிச 21

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே இங்கு நடைபெறும் உத்தியோகபூர்வமற்ற இரண்டாவது கிரிக்கெட் போட்டியில், இலங்கை தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 280 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா தனது முதல் இன்னிங்சில் ஆறு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு மொத்தம் 505 ஓட்டங்கள் எடுத்தது.

மத்தியபோசன இடைவேளைக்குப்பின்னர் இலங்கை தனது முதல் இன்னிங்ஸை முடித்துக்கொள்ளவே, தனது இரண்டாவது இன்னிங்ஸையும் தொடர்ந்து விளையாட இலங்கைக்கு நேரிட்டது.

இன்றைய ஆட்ட முடிவில் இலங்கை தன் இரண்டாம் இன்னிங்ஸில் 3 விக்கெட் நஷ்டத்திற்கு 196 ரன்கள் எடுத்தது. ஜயசிங்கா 78 ரன்களுடனும், திஸேரா 62 ரன்களுடனும், அவுட் ஆகாமலிருக்கிறார்கள்.

இலங்கை தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கியதும் முதலில் டி. சி. எட்வேர்ட்டும், சி. ஈ. எம். பொன்னையாவும் துடுப்பெடுத்து விளையாடினர். எட்வேர்ட் 15 ஓட்டங்கள் எடுத்தபொழுது ஆட்டமிழந்தார். இதனைத் தொடர்ந்து பொன்னையா 15 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார். ரொட்ரிகோ 99 ஓட்டங்கள் எடுத்த பொழுது, அவர் அடித்த பந்தை என்ஜினியர் மிகவும் லாவகமாகப் பிடித்து ரொட்ரிக்கோவை ஆட்டமிழக்கச் செய்தார். இதன் பின்னர் எஸ். ஜயசிங்காவும், எம். திஸேராவும் விளையாடத்தொடங்கினர். இவர்களிருவரும் முந்திய இன்னிங்ஸில் மிகவும் திறமையாக விளையாடி அதிகமான ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்துதவினர்.

காஷ்மீர் பற்றி பிரகடனம்

புதுடில்லி, டிச. 21

இந்திய அரசியல் சாஸனத்தின் 356, 356-வது ஷரத்தை ஜம்மு-காஷ்மீருக்கும் விஸ்தரிக்கும் பிரகடனம் ஒன்றை ராஷ்டிரபதி இன்று விடுத்தார்.

இன்னும் ஜனாதிபதி இல்லை

ரோமாபுரி, டிச. 21

இத்தாலியில் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்யும் முயற்சி 9 வாக்கெடுப்புக்களுக்குப் பின்பும் தோல்வி அடைந்தது. இன்னும் 5 வாக்கெடுப்புக்கள் வரை நடத்தப் படவிருக்கின்றன.

அகதிகளுக்கு பிரஜா உரிமை

புதுடில்லி, டிச. 21

கிழக்கு பாகிஸ்தான், பர்மா, ஆபிரிக்க நாடுகள் ஆகிய இடங்களிலிருந்து வரும் அகதிகளுக்கு இந்தியா முழு பிரஜா உரிமை அளிக்குமாஎன லோக சபையில் கேட்கப்பட்டது.

இவர்களில் இரண்டு பிரிவினர் இருக்கிறார்கள் என்றும் ஏற்கனவே இந்தியப் பிரஜா உரிமைபெற்றவர் ஒரு சாரார் என்றும், மற்றவர்கள் தங்களை பதிந்துகொண்டபின் பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்த பின் அது பூர்த்திசெய்யப்படும் என்றும் உதவி வெளிமந்திரி திரு. தினேசிங் கூறினார்.

சுவர்ண்சிங்

புதுடில்லி, டிச. 21

சீன அணுக்குண்டு வெடித்திருப்பது பற்றி ஆராய மண்டலசார்பற்ற மாநாடு எதுவும் கூட்டும் உத்தேசம் இல்லையென வெளிநாட்டு மந்திரி சுவர்ண்சிங் கூறினார்.

தமிழரசு அபேட்சகர் விபரம் 25-ந் திகதி வெளியாகும்

கொழும்பு, திங்கள்

தமிழரசுக்கட்சி அபேட்சகர்களின் விபரம் 25-ந் திகதி உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்று தெரிகிறது.

சென்றவாரத்தில் தமிழரசுக்கட்சியின் நியமனக்குழுவும் காரியக்கமிட்டியும் அபேட்சகர் நியமன சம்பந்தமாக ஆராய்ந்தது. யாழ்ப்பாணத்தொகுதியில் திரு. வி. எஸ். மார்டினையும் கோப்பாய்த்தொகுதியில் திரு எஸ். கதிரவேலுப்பிள்ளையையும் கட்சி அபேட்சகர்களாக நிறுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. பின்வரும் தொகுதிகளில் தமிழரசுக்கட்சி அபேட்சகர்கள் போட்டியிடுவர்.

காங்கேசன்துறை— எஸ். ஜே. வி. செல்வநாயகம், வட்டுக்கோட்டை— ஏ. அமிர்தலிங்கம். உடுவில்— வி. தர்மலிங்கம், கோப்பாய்— எஸ். கதிரவேலுப்பிள்ளை, பருத்தித்துறை- க. துரைரத்தினம், உடுப்பிட்டி - கே. ஜெயக்கொடி. யாழ்ப்பாணம் - வி. எஸ். மார்ட்டின், சாவகச்சேரி- வ. ந. நவரத்தினம் ஊர்காவற்றுறை - வ. நவரத்தினம், கிளிநொச்சி - வவுனியா - வின்சன்ட திருக்கோணமலை - எஸ். எம். மாணிக்கராசா, மூதூர் - எம். ஈ. எச். முகம்மதலி கல்குடா - பி. மாணிக்கவாசகர், மட்டக்களப்பு - செ. இராசதுரை, பட்டிருப்பு - எஸ். எம். இராசமாணிக்கம், கல்குடா - மசூர் மௌலானா, பொத்துவில் - எம். எஸ். காதர், மன்னார்

(6-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் அபேட்சகர்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழ் காங்கிரஸ் வவுனியாவில் தனது கட்சி சார்பில் திரு. டி. சிவசிதம்பரத்தை நிறுத்த உத்தேசித்துள்ளதாக அறியப்படுகிறது.

"பாரபட்சமற்ற நடத்தை எதிர்பார்க்கப்படுகிறது"

அரசாங்க அதிபர்களுக்கு பிரதமரின் செய்தி

கொழும்பு, திங்கள்

எதிர்வரும் பொதுத்தேர்தல் சமயத்தில் அரசாங்க அதிபர்கள், அவர்களின் கீழ் சேவைசெய்யும் இதர அரசாங்க ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து பாரபட்சமற்ற நடத்தையை அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும், மக்களின் சுதந்திரத்தை இதன் மூலமே பாதுகாக்க முடியும் என்றும் பிரதமர் சிறிமாவோ அரசாங்க அதிபர்கள் மகாநாட்டுக்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியிருக்கிறார்.

போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம்ஏற்படவில்லை

சுந்தரலிங்கம் 2 தொகுதிகளில் போட்டியிடலாம்

கொழும்பு, திங்கள்

ஈழம்முன்னணித் தலைவரும் முன்னைநாள் வவுனியா எம். பி.யுமான திரு. சி. சுந்தரலிங்கம் காங்கேசன்துறை தொகுதியிலும் வவுனியா தொகுதியிலும் போட்டியிடலாம் எனத் தெரியவருகிறது.

தமிழ்க் காங்கிரஸுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் இதுவரை ஏற்படாததாலேயே அவர் வவுனியாவில் போட்டியிடலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிளிநொச்சியில் ஈழம் முன்னணி சார்பில் திரு. செ. சரவணமுத்து நிறுத்தப்படலாமென அறியப்படுகிறது.

பருத்தித்துறை, உடுவில், சாவகச்சேரி ஆகிய தொகுதிகளிலும் மற்றும் சில தொகுதிகளிலும் ஈழம் முன்னணி போட்டியிடவிருப்பதாகத் தெரியவருகிறது.

திரு. சுந்தரலிங்கம் இவ்வார இறுதியில் தமது கட்சிக்கொள்கைபற்றி விரிவான அறிக்கையொன்றை வெளியிடவிருக்கிறார்.

மணிவாக்கு

உங்களுக்கு நாடு என்ன செய்யமுடியுமென்று கேட்காதீர்கள். உங்கள் நாட்டிற்கு நீங்கள் என்ன செய்ய முடியுமென்று கேளுங்கள். நாமெல்லாம் சேர்ந்து மனிதரின் விடுதலைக்கு என்ன செய்யமுடியுமென்று கேளுங்கள்.

—ஜோன் கென்னடி.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 8 உ (22-12-64)

உணவு நிலை

இவ்வருடத்தின் முதல் ஒன்பது மாத காலத்தில் இலங்கையின் வெளிவர்த்தகத்தில் சுமார் பதினொன்று கோடி ரூபாய் துண்டுவிழுந்திருக்கிறதாக ஒரு செய்தி கூறுகிறது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் விலை குறைந்தும் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் அதிகரித்ததுமே இதற்கு முக்கிய காரணம்.

தெயிலை, ரப்பர் ஆகியவைகளே இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள்கள். இப்பொருள்களுக்கு உலக மார்க்கட்டில் வேறு நாடுகளுடன் இலங்கையும் போட்டி போட வேண்டியுள்ளது. செயற்கை ரப்பருடனும் இலங்கைபோட்டி போட வேண்டியுள்ளது. இதுதவிர சீனா போன்ற நாடுகளுடன் இலங்கை வர்த்தக ஒப்பந்தம் செய்துள்ளதால் இலங்கையின் உற்பத்திப் பொருள்களை மேற்குநாடுகள் வாங்குவதற்கு முன்வருவதாக இல்லை. வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள நாடுகளும் உணவுத் தேவையைத் தீர்க்கக்கூடிய நிலையிலும் இல்லை.

இலங்கையின் அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, சீனி, மாவு ஆகியவைகளுக்கு இலங்கை அதிக விலை கொடுத்தே இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இந்நிலை நீடிப்பது நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட வழிவகுக்கக் கூடும். எனவே அதிக உணவு பயிரிடும் இயக்கத்துக்கு மீண்டும் முக்கியத்துவமளித்து செயல்படுத்தவேண்டிய அவசியம் முன்னெப்பொழுதையும்விட இன்று ஏற்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் இறக்குமதி செய்வதில் கஷ்டம் ஏற்பட்டிருப்பதுடன் நாட்டில் இப்பொழுது நிலவும் வரட்சிபோன்ற இயற்கைச்சோதனைகளும் சேர்ந்துள்ளன. இப்பொழுது தேர்தல் காலமாதலால் நாட்டின் உணவு நிலையை அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தமது பிரசாரத்துக்குச் சாதகமாகப்பயன்படுத்திக்கொள்ள விரும்பக்கூடும். உணவு நிலை தேர்தல் விஷயமோ ஒரு கட்சி சம்பந்தப்பட்ட விஷயமோ அல்ல. உணவு விஷயத்தில் அடுத்த தேர்தலைப்பற்றிக்கவலை கொள்வது நிச்சயம் யாருக்கும் நன்மைதரமுடியாது. மக்கள் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். இந்தமுக்கிய தேசியப் பிரச்னையை தேசிய ரீதியில் அரசியல் தலைவர்களும் வர்த்தக, விஞ்ஞான நிபுணர்களும் சேர்ந்து அணுகவேண்டும். உரிய சமயத்தில் இவ்விஷயத்தில் அக்கறையெடுக்கத்தவறினால் பொதுத்தேர்தலுக்குப் பின் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அது நிம்மதியாக இருக்கமுடியாதென்பது நிச்சயம்.

"கூட்டுச் சேர்வதை நான் எதிர்த்தேன்"

சி. பி. டி. விளக்கம்

மின்னேரியா, திங்கள்

"சமசமாஜிகளுடன் கூட்டுச் சேர்ந்து மக்களின் சுதந்திரத்தை அழிக்க பிரதம மந்திரி முடிவுசெய்துவிட்டதை நான் அறிந்ததும் கூட்டரசாங்கத்திலிருந்து விலகி அதை வீழ்த்துவதைத்தவிர எனக்கு வேறு ஒருவழியும் தென்படவில்லை" என்று மின்னேரியாத் தொகுதியிலுள்ள ஹிங்குருக்கொடையில் நேற்று நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் திரு சி. பி. டி. சில்வா பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கடந்த மே மாதம் 8ம் தேதி பிரதமருக்கு எழுதிய கடிதமொன்றில் சமசமாஜிகளுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கம் அமைப்பதைத் தாம் ஆதரிக்கமுடியாதென்றும் ஆனால் எனது கருத்தைப் பிரதமர் ஆதரிக்கவோ அல்லது கவனிக்கவோ இல்லையென்றும் கூறினார்.

புகையிரத நூற்றாண்டு விழா

கொழும்பு, திங்கள்

புகையிரத பகுதியின் நூற்றாண்டு விழா இன்று ஆரம்பமானது. இந்த வாரத்தையொட்டி இன்று பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இன்று காலை, விசேஷ முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது. புகையிரதக் கண்காட்சியொன்றும் நவீன புகையிரத பொருட்காட்சியும் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேயர் தெரிவு

கொழும்பு, திங்கள்

கொழும்பு மாநகரசபையின் விசேஷ கூட்டமொன்று நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும். இந்தக் கூட்டத்தில் புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்படுவார். திரு. ஜோன் ஹொட்டிக்கோ ராஜினமா செய்ததைத் தொடர்ந்து மேயர் பதவி காலியானது.

பின்லாந்தில் மிக்கோயன்

மாஸ்கோ, டிச. 21

சோவியத்யூனியன் ஜனாதிபதி மிக்கோயன் பின்லாந்தில் உத்தியோக பூர்வமற்றமுறையில் விஜயம் செய்யும் பொருட்டு இன்று அங்கு புறப்பட்டார். அவர் அங்கு இரண்டு நாட்கள் தங்குவார். ரஷ்யா பின்லாந்து நேசஉறவுகள் குறித்து இருநாட்டு அதிபர்களும் நாளை பேச்சுக்கள் நடத்துவார்கள்.

இலக்கிய கருத்தரங்கு

பீகிங், டிச. 21

ஆசிய ஆபிரிக்க நாடுகளின் இலக்கிய கருத்தரங்கமொன்று நேற்று இங்கு ஆரம்பமானது. இக்கருத்தரங்கத்தில் இலங்கை உட்பட ஒன்பது நாடுகளைச் சேர்ந்த 27 முதல்தர எழுத்தாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

நுளம்புக்கு ஒரு முற்றுப்புள்ளி

யாழ்ப்பாணம் நகரிலிருந்து நுளம்புகளை விரட்டியடிக்க யாழ்ப்பாணம் மாநகரசபை இப்பொழுதாவது முன்வந்திருப்பது ஒரு போற்றத்தக்க நடவடிக்கையாகும். இதற்காக யாழ்.மாநகரசபையைப் பாராட்டவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது நுளம்புகள் தொல்லை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் தொற்று வியாதிகள் பரவவும் இடம் கிடைத்திருக்கிறது. நுளம்புகளை ஒழிப்பதற்குத்தெளிக்கப்படும் டி.டி.ரி. எனப்படும் மருந்து அதிக சக்தியைக் கொண்டில்லாததால், அம்மருந்து தெளிக்கப்பட்ட பின்னரும் நுளம்புகள் இறவாமல் ஓடுவதை நாம் காணக் கூடியதாகவிருக்கிறது. ஆகையினால்தெளிக்கப்படும்மருந்து அதிக சக்தியைக்கொண்டிருப்பதுடன் இம்மருந்துதெளிக்கப்படும் இடமும் பொருத்தமாக இருக்கப்படவேண்டும்.

நான் வசிக்கும் கொழும்புத்துறையில், கொழும்புத்துறை வீதி-சுவாமியார் வீதி சந்தியிலுள்ள வடிகால்வாய் மிகவும் ஆழமாகவிருப்பதுடன் தண்ணீரும் தேங்கி நிற்கிறது. இதனால் நுளம்புகள் சுதந்திரமாக உற்பத்தியாகவும், படையெடுக்கவும் வசதியாகவிருக்கின்றது. இப்படியான கால்வாய்கள் யாழ்ப்பாணத்தில் நிறைய உண்டு.

நுளம்புகளுக்கு எதிராக யாழ். மாநகரசபை தொடுக்கும் "போருக்கு" பொதுமக்கள் நல்லாதரவு அளிப்பார்கள் என நம்புகிறேன்.

பா அம்பலவாணர்
கொழும்புத்துறை.

இலங்கையின் எதிர்காலம்

1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ந் திகதி பி. ப 1மணியளவில் இலங்கை சுதந்திரம் அடைந்தது. சுதந்திரப்பிள்ளை விருட்சிக லக்கினத்திலும் குருசந்திரயோகத்திலும்பொருந்திய சுபமுகூர்த்த வேளையில் உதயம் பெற்றது. அரசியல் கோள்களாகிய சூரியனும் சனியும் சரராசிகள் மேவிப பகை பெற்று ஒருவரையொருவர் திருஷ்டித்துக் கொண்டிருக்கையில மாரகாதி புதனோடு ஒரே நட்சத்திரத்தில் கூடிய வெள்ளியையும் மாரகாதிபனையும் யுத்தகாரகன் செவ்வாய் திக்குப் பலம் பெற்று கொடும் பார்வை செலுத்திக் கொண்டிருக்கிறபடியால் இலங்கையில் ஸ்திரமான அரசியல் நிலை ஏற்படுவது கஷ்டமென்றும் ஒவ்வொரு அரசுக்கும் அகால குழப்பம் ஏற்படுமென்றும் ஸ்திரமான நிலையில் இருக்க மாட்டாதென்றும் மேலும் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கி 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையும் நிகழும்வெள்ளிபுத்தியில் பொதுத் தேர்தல் நடக்குமென்றும் 1951-ம்ஆண்டு ஜூன் மாதத்தில் வெளிவந்த 'இந்திய அஸ்ரோலோஜிக்கல்' சஞ்சிகைகளில் கூறப்பட்டிருக்கிறது.

ஸ்திரமான அரசியலையும் நிதிநிலையையும் சீராக்க வேண்டுமேயானால் ஓர் சிறந்த முகூர்த்தத்தில் இலங்கையைக் குடியரசாக்க வேண்டும்.

ஜி. ஜி. பிள்ளை.

நல்லூர் கோவில் மனேஜர்

நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆதீன கர்த்தா ஸ்ரீ இ. சண்முகதாஸ் மாப்பாண முதலியாரின் மறைவு சைவசமயத்துக்கும் தமிழ் சமூகத்துக்கும் மேற்பட்ட பெரும் நஷ்டமாகும். உண்மையில் அவரின் மறைவினால் இலங்கையிலும் இந்தியாவிலும் சமயத்துக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இவரின் அளப்பரிய சேவையைத்தொடர்ந்து நடாத்த சண்முகதாஸின் சகோதரர் நியமிக்கப்பட்டுள்ளார். கோவில் நிர்வாகத்திலும், சேவையிலும் நல்ல அனுபவம் பெற்றுள்ள இவர் திறமையான முறையில் நல்லூர்க்கோவில் நிர்வாகத்தை நடாத்துவார் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. எமது ஈழத்தில் மதவழிபாட்டில் தனித்தன்மை பெற்று முன்மாதிரியாகத்திகழும் புனித நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்னர் போல சிறப்புற்று விளங்கும் என்பது உண்மையே. நல்லூர் கந்தசுவாமி கோயில் திறம்பட நடாத்த முன்வந்திருக்கும் புதிய மனேஜருக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லூர் கந்தன் நற்றுணை புரிந்து எல்லோரையும் சுகத்துடன் நீண்டகாலத்துக்கு வாழ்விக்க அருள் புரிவானாக.

-எஸ். சிவசுப்பிரமணியம்

"களனியில் போட்டியிடுக"

களனி, திங்கள்

களனித் தொகுதியில் பிரதமர் போட்டியிட வேண்டுமென்று கோரி பிரதம மந்திரிக்கு சிலர் மகஜர் ஒன்று சமர்ப்பித்துள்ளனர்.

இங்கு நடைபெற்ற விசேஷ கூட்டமொன்றில்; களனித் தொகுதிக்கு ஒரு பௌத்தரை மட்டுமே தேர்ந்தெடுக்கவேண்டுமென்று பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கோரும் தீர்மானமொன்று நிறைவேறியது.

களனி ஒரு புனித நகரானதால் இத்தொகுதிக்கு ஒரு பௌத்தர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றும் கோரப்பட்டது.

வாக்களிப்புநிலையங்கள்

கொழும்பு, திங்கள்

தேர்தல் காலத்தில் சகல வேலைகளையும் துரிதமாகவும் விரைவாகவும் நிறைவேற்றும் பொருட்டு இம்முறை 25,000 அரசாங்க ஊழியர்கள் ஈடுபடுவார்கள் நாட்டின் பல பகுதிகளிலும் மொத்தம் 4,700 வாக்களிப்பு நிலையங்கள் இருக்கும்

கோரிக்கை

சாவகச்சேரி, திங்கள்

வட இலங்கைச் சலவைத் தொழிலாளர் சங்கம் கெருடாவிலில் உள்ள இல்வாரை என்ற குளத்தை அப்பகுதி சலவைத் தொழிலாளர் அனைவரும் பயன்படுத்துவதினால் அதை நல்ல முறையில் சீர்திருத்திச் செப்பனிட்டுத்தருமாறு தென்மராட்சிக் காரியாதிகாரிக்கு விண்ணப்பித்துள்ளது.

பயனுள்ள பேச்சு நடத்தினேன்

குரோமிக்கோ தகவல்

நியூயோர்க், டிச. 21

ஐ. நா. கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் பொருட்டு இங்கு வந்த சோவியத் வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோ இன்று தாயகம் புறப்பட்டார். அமெரிக்காவில் இருக்கையில் அவர், அதிபர் ஜோன்ஸனுடனும் அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு டீன் ரஸ்குடனும் பேச்சுக்கள் நடத்தினார்.

தாயகம் புறப்படுமுன்னர் நிருபர்களுக்கு அவர் அளித்த ஒரு பேட்டியில், பயனுள்ள பேச்சுக்கள் தாம் நடத்தியதாகவும் அமெரிக்க—ரஷ்ய உறவுகள் முன்னேற்றமடைந்திருப்பதாகவும் கூறினார்

ஐயாறன் எழுதுவது

நயினாதீவிலே ஒரே வாரத்தில் இருஇடங்களில் மணிவாசகர்விழா நடைபெற்றுள்ளது. அங்கு மணிவாசகர் அடிக்கடி வர வேண்டிய காரணமென்னவென்று ஓர் அன்பரைக் கேட்டதற்கு அவர் புத்தரை வாதில் வெல்லுவதற்காகத்தான் என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

ஏற்கனவே புத்தரை சிதம்பரத்தில் வாதில் வென்று வெற்றிக்கொடி நாட்டிவிட்டார் மணிவாசகர். ஈழத்திலுள்ள பௌத்த மக்கள் கதிர்காமத்துக்கு மட்டுமன்றி, இந்துக் கோவில்களுக்கெல்லாம் இப்போது அதிகமாக வந்து வழிபட்டு நேர்த்திக்கடனும் செலுத்துவதைப் பார்க்கிறோம். கொழும்பு முகத்துவாரம் பிள்ளையார் கோவிலுக்கு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பௌத்த சிங்களவர்கள் வந்து வழிபட்டு காணிக்கை செலுத்துவதாக ஓர் சைவஅன்பர் தெரிவித்தார்.

முந்தாநாள் நயினாதீவுக்கு இரண்டு மூன்று ஸ்பெஷல் பஸ்களில் சிங்கள பௌத்தர்கள் குடும்பம் குடும்பமாக வந்து முதலில் புத்தர்கோவிலில் சென்றுவிட்டு பின்னர் நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு வந்து பக்தியுடன்வணங்குவதையும், அர்ச்சனை செய்து விபூதி, சந்தனம், குங்குமம் இட்டுக் கொண்டு செல்லுவதையும் பார்த்தேன்.

சென்றமாதம் ஒரு சிங்களத் தாய் ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலுக்கு நேரே வந்து, ரூ. 500 கொடுத்து விசேஷ சங்காபிஷேகம் செய்வித்தாராம். அங்குள்ள புத்தர் கோவிலுக்குக்கூட அவர் செல்லவில்லை என்று அங்குள்ள ஓர் அன்பர் தெரிவித்தார். இப்படி இருக்கையில் ஈழத்திலுள்ள பௌத்தர்களை இந்துசமயத்தின் விரோதிகளென்று கருதுவது சரியாகுமா?

* * *

நயினாதீவுக்குப் போகிற வழியில பல நெல் வயல்களிலும் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன! மழையில்லாமல் பயிர்கள் மிக வாடியதால் நம்பிக்கையிழந்து மாடுகளை மேயவிட்டனர். மாடுகளுக்கு வேட்டை. மனிதர்களுக்கு கஷ்டம்!

ஆனால் திங்களன்று அப்பகுதிகளிலெல்லாம் மழை பெய்துள்ளது. நேற்றும் மப்பும் மந்தாரமாகவேயுள்ளது. நல்ல மழை பெய்யக்கூடிய அறிகுறிகளைக் கண்டேன். மழை இப்போதாவது பெய்தால் சிறுதானியங்கள் விளைவிக்கலாம் என்று சற்றே நம்பிக்கை. இதைப்பற்றி அங்கு ஓரன்பரைக் கேட்டதற்கு அவர் கவலைப்படாமல், அம்மை நாகபூஷணி தங்களைக் கைவிட்டு விடமாட்டாரென்றார். எவ்வளவு நம்பிக்கை.

* * *

ஸ்ரீமாவோவின் அரசாங்கம் ஒரு வாக்கினால் ஏன் தோற்க வேண்டி ஏற்பட்டதாம் தெரியுமா? கொழும்பு கும்பெனித் தெரு, தலைமன்னார் முதலிய முகாம்களிலே மாதக்கணக்காக அடைபட்டுள்ள மக்களின் மனவேதனையும் இங்குள்ள அவர்களது பெண்டுபிள்ளைகள் விடும் துக்கக்கண்ணீரும் தான் காரணமென்கிறார் ஓரன்பர். ஆனால் ஸ்ரீமாவுக்கும் டட்லிக்கும் இதை யார்தான் சொல்லப்போகிறார்கள்? யூ. என். பி. வந்தாலும் இந்த நிலை மாறுமா?

* * *

சங்கரனே நின் பாதம் போற்றி போற்றி, சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி, பொங்கரவா நின் பாதம் போற்றி போற்றி, புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி, அங்கமலத்தயனோடு மாலுங்காணா அனலுருவா நின்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

பாதம்போற்றி,போற்றி மங்கலத்திருபாதம்போற்றிபோற்றி, திருமூலட்டானனே போற்றி போற்றி.

— அப்பர் சுவாமிகள்.

அயூப், செல்வி ஜின்னா கூட்டத்தில் குழப்பம்!

கதிரைகள், செருப்புகள் பறந்தன; பலர் காயம்; ஐவர் கைது

ஆளும் கட்சியினர்மீது பாத்திமா கண்டனம்

டாக்கா, டிச. 21

நேற்று கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற ஆதார ஜனநாயகவாதிகளின் முதல் கூட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அயூப்கான், செல்வி பத்திமா ஜின்னா ஆகியோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், கதிரைகள் தூக்கி வீசியெறியப்பட்டன என்றும், கற்கள், செருப்புகள் தாராளமாகப் பரிமாறப்பட்டனவென்றும் அறிவிக்கப்படுகிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இந்தக் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தனர்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் தான் குழப்பத்தை முதலில் தூண்டினராம். தேசிய சட்டசபை சபாநாயகரின் ஆதரவாளர்கள் மிகவும் மோசமான முறையில் நடந்துகொண்டதுடன் குழப்பத்தை மேலும் மோசமாக்கினார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர். இதன் விளைவாக 7 பேர் காயமுற்றனர். 5 பேரைப் பொலிஸார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

ஆதார ஜனநாயகவாதிகளின் முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்ட செல்வி பாத்திமா ஜின்னா உரைநிகழ்த்துகையில் சபாநாயகரின் போக்கைக் காரசாரமாகக் கண்டித்ததுடன் அதிபர் அயூப்கானையும் வன்மையாகக் கண்டித்திருந்தார்.

இப்படியானதொரு முக்கியமான கூட்டத்தில் ஆளும்கட்சியினர் குழப்பம் விளைவிப்பது குறிப்பாக ஆட்சிமுறையின் சீர்கேட்டை அம்பலமாக்குகிறது. அயூப்கான் சர்வாதிகாரராகிவிட்டார் என்று செல்வி ஜின்னா கூறினார்.

அதிபர் அயூப்கான் பேசுகையில் செல்வி பாத்திமா செயல்திறனற்ற ஒரு முதாட்டி என்று வர்ணித்தார்.

செல்வி ஜின்னாவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று மாணவர்கள் நடத்திய ஊர்வலம் ஒன்றை பொலிஸார் தடுத்தனர்.

முன்னர் ஒருதடவையிலும் செல்வி பாத்திமா ஜின்னாவும், அதிபர் அயூப்கானும் கலந்துகொண்ட கூட்டத்தில் இப்படியான குழப்ப சம்பவங்கள் நடைபெற்றது.

சைகோனில்

சிவிலியன் ஆட்சிமீது புதிய கட்டுப்பாடுகள்

நடவடிக்கைகளுக்கு பிரதமர் அதிபர் ஆதரவு

சைகோன், டிச. 21

தென் வியட்னாம் சிவிலிய ஆட்சிமீது இராணுவ தலைவர்கள் கடுமையான கட்டுப்பாடுகள் விதித்துள்ளனர்.

தென் வியட்னாம் அரசாங்கம் பௌத்த மக்களுக்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்கிறது என்ற குற்றச்சாட்டின் மீது கடந்த சில தினங்களாக அரசாங்கத்துக்குப் பல பௌத்த தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துவந்தனர். அரசியல் நெருக்கடி நீடித்ததைத் தொடர்ந்து நேற்று உயர் தேசிய மன்றத்தை இராணுவ தலைவர்கள் கலைத்தனர். நெருக்கடிக்குக் காரணமாகவிருந்த சில அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இதுவரை மொத்தம் 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உயர் தேசியசபை, நாட்டின் ஒற்றுமைக்கு தீங்கு விளைவித்த காரணத்தினால்தான் இச்சபையைக் கலைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதென்று இராணுவ தலைவர்கள் தெரிவித்துள்ளனர். இராணுவ தலைவர்களின் இந்த நடவடிக்கைக்கு தென் வியட்னாம் அதிபர், பிரதமர் ஆதரவு அளித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், உயர் தேசியசபை கலைக்கப்பட்டபின்னரே இது பற்றிப் பிரதமருக்கும், அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டதாக சில செய்திகள் கூறுகின்றன. கலைக்கப்பட்ட சபையின் சட்டமியற்றும் அதிகாரங்கள் அதிபருக்கு வழங்கப்படவிருக்கின்றன.

தென் வியட்னாமில் இப்பொழுது அமைதி நிலவுகிறதாகவும் அசம்பாவிதம் எதுவும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்துல்லாவுக்கு அனுமதி மறுப்பு

ராவல்பிண்டி, டிச. 21

மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயஞ்செய்வதற்கு திரு. ஷேக் அப்துல்லாவுக்கும் அவரின் கோஷ்டியினருக்கும் இந்திய அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்துவிட்டதாக இங்கு அறிவிக்கப்பட்டது. மெக்காவுக்கு விஜயஞ்செய்ய ஷேக் அப்துல்லா திட்டமிட்டிருந்தார். அங்கு சென்றபின்னர் சில மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயஞ்செய்ய இந்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருந்தார்.

ரஸ்க்–குரோமிகோ மீண்டும் பேச்சு

நியுயோர்க், டிச. 23

நேற்று ருஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோவும், அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்கும் ஐ. நா. நிதிப் பிரச்சினைபற்றி மீண்டும் பேசினர். அணுஆயுதங்களைப் பரவாமல் தடைசெய்வது பற்றி பெருமளவு உடன்பாடு ஏற்பட்டதாய் குரோமிகோ கூறினார். ஜெர்மனி ஐரோப்பா பற்றியும் அவர்கள் பேசினர்.

ரயில் விபத்தில் 45 பேர் பலி

லண்டன், டிச. 21

மெக்ஸிக்கோவில், பிரயாணிகள் ரயில்வண்டியொன்று சரக்கு ரயில்வண்டியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 45 பேர் மாண்டனர்; 75 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து மிகவும் மோசமானதொன்று என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விதியோ விதி!

புதுடில்லி, டிச. 21

குஜராத் ராஜ்யத்தில் கடந்த சில தினங்களாக வீசும் கடும் குளிர் காரணமாக இதுவரை 15 பேர் மாண்டுவிட்டனர். ஒரு பகுதியில் குளிரைப் போக்குவதற்கு சிலர் பெருமளவில் தீ மூட்டினர் இதனால் ஏற்பட்ட விபத்தில் எட்டுப் பேர் நெருப்பில் வெந்து மாண்டனர்.

கூட்டு அரசியல் சபை

கெய்ரோ, டிச. 21

ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் ஈராக்குக்குமிடையே, ஒரு கூட்டு அரசியல் சபை நிறுவப்பட்டுள்ளது. இரு நாட்டு நாட்டு அதிபர்களும் கூடிப் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து இந்தச் சபை அமைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சபையில், ஐக்கிய அரபுக் குடியரசைச் சேர்ந்த 18 உறுப்பினர்களும் ஈராக்கைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும் இருப்பார்கள். இரு வருட காலத்துக்குள் ஒரு அரசியல் சாஸன ஒற்றுமை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலாச்சார உறவுகள்

புதுடில்லி, டிச. 21

இந்திய - சோவியத் சபையொன்று நேற்று இங்கு அமைக்கப்பட்டது. இரு நாடுகளின் கலாச்சார உறவுகளை விஸ்தரிக்க இச்சபை முயற்சி எடுக்கும்.

அதிகம் தேன் உண்பவர்கள்

ஹாம்பர்க், டிச. 21

உலகிலேயே அதிக அளவில் தேன் இறக்குமதிசெய்யும் நாடு மேற்கு ஜெர்மனி. கடந்த ஆண்டில், மட்டும் 45,000 டன் தேனை மேற்கு ஜெர்மனி இறக்குமதி செய்திருக்கிறது உலகிலேயே தேன் அதிகமாக உட்கொள்பவர்கள் மேற்கு ஜேர்மனியர்தான். அவர்கள் ஒவ்வொருவரும் 970 கிராம் தேன் உண்கிறார்கள். 1938-ல் 7000 டன் தேன் மட்டுமே ஜெர்மனி இறக்குமதி செய்தது. இன்று இந்த அளவு 6 மடங்குக்குமேல் உயர்ந்துவிட்டது.

மேல்நாட்டிலும் ஒரு கற்பின் செல்வி

நியுயோர்க், டிச. 21

கணவனுக்குச் சிறிதளவுந் துரோகம் செய்துவிடக்கூடாது என்ற கவலையால் உந்தப்பட்ட, கவர்ச்சிப் பெண்ணொருத்தி மற்றைய ஆண்களுக்கு தன்மீது வெறுப்பு ஏற்படுவதற்காக தமது நிறையை பெரும் சிரமப்பட்டு 84 றாத்தல் அதிகரித்துள்ளார்.

இந்தத் தகவலை, நியுயோர்க் மருத்துவ மனையொன்றின் எடைக்கட்டுப்பாட்டுத் திட்ட இயக்குனரான டாக்டர் கிளாடே மில்லர், வெளியிட்டுள்ளார். அந்தக் கவர்ச்சிப் பெண், இதன் மூலம் தனது குடும்பத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்துக்கொண்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

கண்ணகி கூற்று

பிற ஆடவனின் கண்களுக்கு தன் அழகு விருந்தாக அமைவதை விரும்பாத ஒரு கற்பரசி தனது முகத்தை குரங்கு முகமாகக் கடவது என்று சாபமிட்டுக்கொண்டதையும் வெளிநாடு சென்று திரும்பிய கணவன் தனது மனைவியைக் கண்டதும், குரங்கு முகம் நீங்கி களிப்புடன் வாழ்ந்ததையும் சிலப்பதிகார தலைவி கண்ணகியின் வாயிலாக கூறப்படுகிறது. இப்பொழுது இதைபோன்று மேல்நாகரிகம் வளரும் மேல்நாட்டிலும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

கண்ணாடியில் வானொலி!

நியுயோர்க், டிச. 21

அமெரிக்காவில் இப்பொழுது புதுவகையான கறுப்புக் கண்ணாடிகள் விற்பனை செய்யப்படுகின்றன. சூரிய ஒளி, கண்ணைக் குத்தாமலிருப்பதைத் தடுக்க அணியப்படும் இந்தக் கறுப்புக் கண்ணாடிகளில் உள்ளமைந்த சிறிய 'டிரான்சிஸ்டர்' வானொலிகள் உள்ளன.

இவற்றிலுள்ள பிரேம்களுக்குப் பக்கத்தில் நுண்ணிய ஒலி பெருக்கிகள் உள்ளன. இதை அணிபவர் வெளியே யாருக்கும் கேட்காதபடி, பாட்டையோ, செய்தியையோ கேட்டுக்கொண்டிருக்கலாம். இதன் விலை என்ன தெரியுமா? 138 ரூபாவாகும்.

கூட்டுறவு சங்க மூலம் பசளைகளை விநியோகம் செய்க

கமிஷனருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

உப உணவுப் பொருள்கள் பயிரிடுவதற்கு உபயோகிக்கப்படும் பசளைகளை பலநோக்கு கூட்டுறவு சங்கமூலம் விநியோகிக்க வகைசெய்யுமாறு அளவெட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம், கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் கோரியுள்ளது. இதனால் விவசாயிகள் நன்மை அடைவதுடன் வெளிநாட்டுச் செலாவணியும் மிச்சப்படுத்தப்படும் என மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது சங்க மூலம், நெசவுசெய்ய உபயோகிக்கப்படும் பருத்தி நூல்களையும் விநியோகிக்க வகை செய்யுமாறு மகஜரில் கோரப்பட்டுள்ளது.

அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்பட்டுள்ள லாபம், அது செய்துவரும் பணிகள், அதற்கு செய்யப்படவேண்டிய வசதிகள் பற்றி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அரசியல் கட்சிகள் சுறுசுறுப்பு

கொழும்பு, திங்கள்

தங்களது அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதில் இலங்கையில் உள்ள சகல அரசியல் கட்சிகளினதும் நியமனச் சபைகள் வார இறுதியில் கூடிப் பல கூட்டங்களை நடத்தின.

சில அரசியல் கட்சிகள் தங்களது அபேட்சகர்களின் பெயர் விபரங்களை இப்பொழுதே வெளியிட்டுள்ள போதிலும் பல அரசியல் கட்சிகள் அநேகமாக ஜனவரி மாத முதல்வாரத்தில் தான் இவற்றை வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா, கடந்த வாரம் பல சுதந்திரக்கட்சி மந்திரிகளையும், அரசியல்வாதிகளையும் சந்தித்து குசுகுசு பேச்சுகள் நடத்தினார். சுதந்திரக்கட்சி எம். பி.க்கள் அதிகமாகவுள்ள மாகாணங்களில் மந்திரிகளே தேர்தல் பிரசாரம் செய்வார்களெனத் தெரியவருகிறது.

செய்திச் சுருக்கம்

தமிழினம் வருங்காலத்தில் சக்தியுடன் திகழவேண்டுமாயின் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களை மீண்டும் தெரிவுசெய்ய வேண்டுமெனத் தமிழரசு வாலிப முன்னணியின் திருமலைக் கிளை ஆரம்ப விழாவில் டாக்டர் சிவானந்தம் பேசும்போது குறிப்பிட்டார்.

* * *

பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தில் 98 சதவிகிதம் மலையகத் தமிழ்க் குழந்தைகள் கல்வி பயில்வதால் இலங்கைப் பிரஜையான மலையகப்பட்டதாரி ஒருவரைத் தலைமையாசிரியராக நியமிக்கும்படி இ. தொ. கா. பதுளை மாவட்ட நிர்வாகசபைக் கூட்டம் இத்தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

* * *

லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் இருபதாவது மகாநாட்டின் தொண்டர் படைக் கூட்டத்தில் திரு. கொல்வின் ஆர். டி. சில்வா உரையாற்றுகையில் சாஸ்திரி-சிறிமா ஒப்பந்தம் நாடற்றவர் என்று சொல்லும் அலங்கோல நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது என்று குறிப்பிட்டார்.

* * *

கூட்டரசாங்கத்திற்கு எதிர்பாராத தோல்வி தெய்வ சாபத்தாலே ஏற்பட்டது எனத் திரு. டட்லி சேனநாயக்கா மெதகம ஆனந்தாராமவில் நடந்த கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

மாணவர் மலர்

கிறிஸ்மஸ் தாத்தா!

— நந்தினி சிவதாசன் —

விடிந்தால் கிறிஸ்மஸ். ஊரெல்லாம் ஒரே கோலாகலம். வீதிகளும், வீடுகளும் வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே சிற்சில இடங்களில் 'கரோல்' கூட்டம் பாடும் ஒலி காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தது. 'நத்தார் தாத்தாக்கள்' சிலர் வீதிகளில் சென்று குழந்தைகளை மகிழ்வித்துக்கொண்டிருந்தனர். ஆனால் ஒரு வீட்டிலிருந்து மாத்திரம் ஒரு குழந்தை அழும் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. ஆம் அவ்வொலி கிறிஸ்டின் வீட்டிலிருந்துதான் வந்துகொண்டிருந்தது. கிறிஸ்டின் அழுதுகொண்டிருந்தான். ஏன்? அடுத்த வீட்டு ஜோனுக்குக் கப்பல் பொம்மை கொடுத்த நத்தார் தாத்தா தன்னிடம் வரவில்லை என்ற குறைதான் அவனை அழத்தூண்டியது.

அவனது தாயாருக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. எவ்வளவோ பட்சணங்கள், பொம்மைகள் கொடுத்தும் அழுகை ஓயவில்லை. அவனது தந்தை அந்த நேரம் தான் கடைக்குச் சென்று வாங்கிய சாமான்களுடன் நாளைய கொண்டாட்டத்திற்காக அலங்கரிக்கப்பட்டிருந்த வீட்டுள் நுழைந்தார். ஓர் அறையில் குழந்தையின் அழுகை ஒலியும் அதற்கு மனைவி கூறும் சமதான வார்த்தைகளும் அவர் காதில் விழுந்தது. உள்ளே சென்று அழுகையின் காரணத்தை அறிந்து தம் அருமை மகனுக்கு ஆறுதல் வார்த்தை கூறியும் அழுகை ஓயவில்லை.

திருமதி ஸ்மித் தமது மகனை அழைத்துக் கொண்டு வீதிக்குச்சென்று வானத்திலே கண் சிமிட்டும் தாரகைகளையும் அவற்றுடன் போட்டிபோடும் வாணங்களையும் மகனுக்கு காட்டிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நத்தார் தாத்தா அந்த வழியாக வந்தார். கிறிஸ்டினைக் கண்ட அவர் அவனை தூக்கி முத்தமிட்டு ஒருபொம்மையும் பரிசாகக் கொடுத்துவிட்டுச்சென்றார். கிறிஸ்டினிற்கு ஒரே சந்தோஷம். 'மம்மி மம்மி! கிறிஸ்மஸ் பப்பா அச்சா' என்று மழலை பேசினான். அவன் தாயாருக்கோ மகனின் அழுகை நின்றதில் ஒரே மகிழ்ச்சி. 'மமமி டடிக்கு காட்டணும்' என்று கூறி விட்டு வீட்டுள் ஓடிய மகனைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றபோது ஹாலில் வைத்திருந்த கிறிஸ்மஸ மரத்தில் கட்டியிருந்த பொம்மையைக் காணாது திகைத்து நின்றாள் தாயார். உள்ளே சென்றபோது கணவன் தன்னுடைய பொய்த் தாடியைக் கழைந்துகொண்டிருப்பதைக்கண்டாள். அவளுக்கு விஷயம் ஓரளவு விளங்கிவிட்டது. நண்பனிடமிருந்து நாடகத்திற்கு இரவல் வாங்கிய தாடி மீசையின் உதவியால் நத்தார் தாத்தாவாக வேஷம் போட்டு நடித்தார் என எண்ணினாள். குழந்தையின் அழுகையை நிறுத்தி அதனை மகிழ்ச்சியூட்டியதில் அவளுக்கு அளவற்றமகிழ்ச்சி.



வெள்ளிக்கிழமை கிறிஸ்மஸ். உங்களனைவருக்கும் "மாணவர் மலர்" கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் கூறி இன்று இங்கு மணம் பரப்புகிறது. சுவைத்துப்பாருங்கள்.

கிறிஸ்மஸ் மரத்தின் இரகசியம்

— ஐ. ரேர்னுட் —

கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்தவ வீடுகளில், வியாபாரத் தலங்களில், படமாளிகைகளில் இன்னும் பல இடங்களில் கிறிஸ்மஸ் மரம் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது முதலில்ஜெர்மனியில் தோன்றி, பின்னர் உலகெங்கும் வழக்கத்திற்கு வந்தது. எந்த ஜெர்மனிய இல்லத்திற்குப் போனாலும் அழகிய மின்சாரதீபங்களாலும், கண்ணாடிப்பந்துகளாலும், பொன்னிற வர்த்திகளாலும் அழகுற அலங்கரிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்மஸ் மரத்தைக் காணலாம் ஜெர்மனியில் ட்ரஸ்பேர்க் என்னுமிடத்தில் கிறிஸ்மஸ மரம் அலங்கரிக்கும் வழக்கம் 1539 ல் ஆரம்பமானது.

ஜெர்மனியில் மக்கள் கூடுவது, உரையாடுவது, நீதி மன்றம் கூடுவது, நீதி வழங்குவது போன்ற செயல்கள் யாவும் முற்காலத்திலே மர நிழலிலே நடைபெற்றன, கிறிஸ்துவும் சிலுவைமரத்திலே உயிர்நீத்து உலகைமீட்டார். இக்காரணங்களை முன்னிட்டே மரத்தைத் தேர்ந்தெடுத்தனர். இவ்வழக்கம் 260 ஆண்டுகளின்பின் ஜெர்மனி எங்கும் பரவி ஸ்கன்டிநேவியாப் பிரதேசங்களிலும் பரவியது. 100 வருடங்களின் பின்னரே இம் மரத்துக்கு தீபாலங்காரம் செய்யும் வழக்கம் ஏற்பட்டது. துருவப் பிரதேசங்களில் தீபம் வாழ்வைக் குறிக்கிறது. வெளிச்சம் தோன்றும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தனர். அதாவது மார்கழி 21,22 தேதிகளில் வானில் ஒளி தோன்றும், அப்போதே நத்தார் விளக்குகளை ஏற்ற ஆரம்பிப்பர். 1900-ம் ஆண்டளவில் இவ்வழக்கம் கிறிஸ்தவ நாடெங்கும் பரவியது

இவ்விருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கிறிஸ்மஸ மரம் அலங்கரிப்பதில் நவீன முறைகள் கையாளப்பட்டன. கடவுளின் குரலை ஞாபகமூட்டும் மணியோசை, நத்தார்க் குடில் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. எப்படியாயினும் கிறிஸ்மஸ் மரத்தின் அமைப்பும் அலங்காரமும் அவனிக்கு ஒளிதந்த அமலனின் பிறப்பை எப்போதும் ஞாபகமூட்டிக்கொண்டேயிருக்கும்.

சேர்ந்து பாடுவோம்

பாவம் சூழ்ந்த நேரத்தில் - கொடும்
பழிகள் சேர்ந்த காலத்தில்
தேவன் கிருபை அருளாலே - எமை
தேடி வந்தார் யேசுபரன்.

பாடித்துதித்தே கொண்டாடுவோம் - பரனை
தேடிக் களித் த பண்பாடுவோம்
கூடிக்களித்தே கொண்டாடுவோம் - தேவன்
கொள்கை மலர பண்பாடுவோம்.

— கவியரசன்

○ ○ ○

"பாலன் பிறந்தான்" பலர் சொன்னர்; 'இம்மானு
வேலன்' எனயார் விளம்பினர்! - சீலன் அவன்
பிள்ளையாய் வந்தான்! 'பெரிய மனித'ரெலாம்
உள்ளமையைக் கண்டார்களோ !

சின்னக் குடிலிற் கிடந்தான் முடிமன்னன்
முன்னவனைக் கண்டோர் முடியற்றோர்! - பொன்னே
கிடந்தார் திருவானர்! கீழோரே காண
நடந்தார் அம், மன்னனை நாடி!

— சத்தியசீலன்

○ ○ ○

மார்கழி குளிரிலே - யேசு
மானிடனாக வந்து
பாவிகள் பாவம் போக்க - யேசு
பாரினிலே பிறந்தார்,

ஆசை மரி முகங் கண்டு - யேசு
துள்ளிக் குதிக்கின்றார்
ஏழ்மையின் சின்னமாம் - யேசுவை
இருகரம் கூப்பி வணங்கிடுவோம்

— மா. சேவியர் பெர்னாண்டோ

அமுதவாக்கு

- கல்லை அமிழ்தன் -

யேசுநாதர் தம்முடைய சீடர்கள் புடைசூழ ஒருநாள் வீதி வழியே சென்று கொண்டிருந்தார். இடைவழியில் நாயொன்று இறந்து கிடந்தது. அந்நாயிலிருந்து துர்நாற்றம் வீசியது. இந்நாற்றத்தைச் சகியாத சீடர்கள் "சீ என்ன துர்நாற்றம்" என்று சொல்லி வெருண்டோடினர். ஆனால் யேசுநாதர் அவ்விதம் செய்யவில்லை. "ஆகா! அந்த நாயின் [illegible]ல் எவ்வளவு வெண்மையாக இருக்கிறது" என்றுமனமாரப் புகழ்ந்தார்.

"நிறை கண்டால் போற்றுங்கள் குறை கண்டால் ஒன்றும் கூறுதீர்கள்" என்று இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்னே யேசு போதித்தார். ஆனால் நாமோ அதற்கு நேர்மாறாக நடந்து கொள்கிறோம். பிறரிடம் குறைகண்டால் அவர்கள் மீது சீறிவிழுகிறோம். நிறை கண்டால் யாதும் கூறாமல் மௌனிகளாகின்றோம். இந்நத்தார் பெருநாளில் யேசுவின் பொன் மொழியின்படி நடந்து நம் வாழ்வை ஏற்றுவோமாக.

இருள் அகன்றது

பாவத்தால் உருக்குலைந்த உலகை உய்விக்க யேசு உதித்தார். பாலன் பிறந்ததும் பாவ இருள் அகன்றது. மனுக்குலத்தின் மாசு நீங்கியது. எங்கும் அமைதி. இன்பம். அவரின் அவதாரம் உலகில் உண்மையை ஒளிரச் செய்தது.

நத்தார் நாடகம்

யேசு பிறந்தாரே . . .

— எம். எஸ். கலா —

(காட்சி: 1)

இடம்: நசரேத்; சூசையப்பர் வீடு

(சூசையப்பர் ஒரு கட்டிலில் உறங்கிக் கொண்டிருத்தல். இனிய இளந்தென்றல் 'உஸ்' என்று தவழ்ந்து வருகிறது. எங்கோ தேவாலயத்தில் மணி ஓசையுடன் தேவகானம் இசைப்பது போன்ற சப்தத்தைக் கேட்டு சூசையப்பர் கண்விழித்து ஒரு தேவதூதரைக்கண்டு திகைப்புறல்.)

சம்மனசு: அஞ்சாதீர்! யாம் ஆண்டவருடைய அடியாரான சம்மனசான தேவதூதர்...... உங்களுக்கோர் நற்செய்தியைக் கொண்டுவந்துள்ளேன். உங்கள் மனைவி மாசில்லா மரியாய் சர்வேசுரனிடத்தில் ஆசிபெற்றிருக்கிறார். அவர்கள் திருஉதிரத்தில் கருப்பம் தரித்து எங்கள் தேவகுமாரனுக்குத் தாயாவார்... அவருக்கு யேசு என்னும் நாமம் சூட்டுவீர் அவர் உன்னதமானவருடைய சுதன் எனப்படுவார்; ஆண்டவரான சர்வேசுரன் அவர் தந்தையாகி தாவீதின் சிங்காதனத்தை அவருக்குத் தந்தருளுவார். ஆதலால் அவர் யாக்கோப்பின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார்... அவருடைய இராட்சியத்துக்கு முடிவேயிராது. அவர் தமது பிரஜைகளைப் பாவத்தினின்றும் காப்பாற்றுவார். அவரே உலக உத்தம இரட்சகரான எங்கள் தேவபிதா... அவர் நாமம் வாழ்க!... அவர்புகழ் வாழ்க!...

(சுடரொளிபோல் தோன்றிய சம்மனசானவர் சிறிது சிறிதாக மறைந்து விட்டார். அவருடைய தேவவாக்கியங்களைக் கேட்ட சூசையப்பர் சந்தோஷத்துடன்)

சூசையப்பர்: நாம் பாக்கியசாலி... நாம் பாக்கியசாலி... இனி என்றுமே நாம் பாக்கியசாலிகள் தான்...

மரியாய்: (மரியாய்) என்ன? என்ன பிதற்றுகிறீர்கள்...?

சூசை: கனவல்ல கன்னிமரி! என் கண்முன்னுல் கண்ட காட்சி... நீ தான் தேவதாய்... உன் உதிரத்திலே நமக்கொரு தேவகுமாரன் பிறக்கப் போகிறான் என்று ஒரு சம்மனசானவர் கூறி மறைந்து விட்டார். அவர்தான் எங்கள் தேவபிதா நீ தான் எங்கள் தேவதாய்... ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே.

மரி: எமக்கா இந்தப்பெரும் பாக்கியம்... நான் என்ன தவம் செய்தேன்... என்றோ ஒரு நாள் தாங்கள் இவ்வுலகில் தோன்றி எம்மை எல்லாம் இரட்சிப்பீர்கள் என்றுதான் நம்பியிருந்தேன்... ஆனால் நான் உங்கள் தாயாராக வருவேன் என்று கனவிலும் கருதவில்லையே...

சூசை: ஆமாம்... இப்பொழுதான் எனக்கு ஞாபகம் வருகிறது... மரி...! மிக்கேயாசின தீர்க்கதரிசனத்தின்படி மெசையா பிறக்க வேண்டிய இடம் ஜெருசலேம் பட்டணத்துக்குத் தெற்கே ஆறுமைல் தூரத்திலிருக்கும் பெதலேம் ஊரில்தானே... அப்படியென்றால்...?

மரி: இப்பொழுது நாம் அங்கே எப்படிப் போவது?... இந்த நசரேத்தூரிலிருந்து பெத்லேமுக்குப் போகவேண்டுமென்றால் குறைந்தது நான்கைந்து தினங்களாவது வேண்டுமே.

சூசை: மரி!... இவ்வளவு காலமும நாம் சீவித்து வந்தவூரை விட்டு எப்படிப் பிரிவது...?

மரி: எனக்கும்தான் வேதனையாக இருக்கிறது எங்கள் பிரிவால் இங்குள்ள பெரியவர்கள் கூடக் கஷ்டப்படுவார்கள்.

சூசை: என்ன செய்வது சகித்துக் கொள்வோம்... ஆண்டவரின் சித்தம் எப்படியோ அப்படியே நடக்கட்டும்.

(திரை)

(அடுத்த இதழில் முடியும்)

யேசுவின் பொன்மொழிகள்

- பொ. நாகராஜன் -

பேதைகளின் மாறுபாடு அவர்களைக் கொல்லும். மூடரின் நிர்விசாரம் அவர்களை அழிக்கும்.

●

செல்வந்தன் வறியவனை ஆள்கிறான்; கடன் வாங்கின வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை

சந்தர்ப்பத்துக்கேற்பக் கூறிய வார்த்தைகள் வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்.

●

செல்வம் அநேக சிநேகிதரைச் சேர்க்கும்; தரித்திரம் தன் சிநேகிதரையே அழிந்துவிடும்.

●

நீதிமானுடைய வழி ராஜபாதைக்குச் சமானம்; சோம்பேறியின் வழியோ முள் வேலி.

●

ஒருவன் உனக்குத் தீங்கு செய்யாதிருக்க, காரணமின்றி அவனுடன் வழக்காடாதே.



"தெய்வவழிபாடு இல்லாததே மழை குறைந்ததற்குக் காரணம்"

திருவாசக விழாவில் பேச்சு

சுழிபுரம், ஞாயிறு

சித்தங்கேணி சிதம்பரேசுவரர் ஆலயத்தில் மணிவாசகர் விழா வட்டுக்கோட்டை கிராம சபைத் தலைவர் முதலியார் சி. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது. விழா ஆரம்பமாவதற்கு முன்னர் நான்கு இடங்களிலிருந்து பஜனை கோஷ்டியினர் விழா மண்டபத்துக்கு வந்து சேர்ந்தனர். தலைவர் தமது தலைமையுரையில் கூறியதாவது:- "எமது சமயத்தில் காணும் இன்பம் வேறு எந்தச் சமயத்திலும் காண முடியாது. சமய குரவர்களில் ஒருவரான திருவாதவூரால் எமக்கு கொடுக்கப்பட்ட திருவாசகம் உண்மையில் ஓர் அருள் அரபியாகும். எமது சமயத்தவர் கொண்டாடும் விழாக்களில் தேவார திருவாசகங்கள் முதலிடம் வகிக்கவேண்டும். அப்போது தான் அதன் பெருமை எமக்கு நன்கு விளங்கும். மார்கழி மாதம், மாதங்களுக்குள் மிகவும் சிறந்தது, அது தேவர்களுக்குரிய மாதமுமாகும். ஆனால் தான் நமது பெரியார்கள் மார்கழி மாத விடியற் காலையில் வழிபாடுசெய்ய வழிவகுத்தார்கள். இன்று மழை குன்றியதற்கு எல்லாம் காரணம் தெய்வ வழிபாடு குன்றியதேயாகும்."

பண்டிதர் த. சுப்பிரமணியம், புலவர் நா. சிவபாதசுந்தரம், பண்டிதர் அ. ஆறுமுகம், வழக்கறிஞர் சி. சுப்பிரமணியம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

மஸ்கேலியா செய்திகள்

கடந்த 5 வருடகாலமாக மஸ்கேலியா அரசினர் வைத்தியசாலையில் சேவைபுரிந்து வந்த டாக்டர் திரு. வாமதேவனை கொட்டகலை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றியுள்ளதால் தோட்டப்பகுதி மக்கள் கவலைகொண்டுள்ளனர்.

* * *

மஸ்கெலியாத் தொகுதியில் சுமார் ஏழாயிரம் தமிழ்வாக்காளர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் இத்தொகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அல்லது தமிழரசுக் கட்சி சார்பில் ஒரு தமிழரை தேர்தலில் நிறுத்தவேண்டுமென்று கோருகின்றனர்.

* * *

அடுத்து வரும் பொதுத் தேர்தல் இலங்கை இந்தியர் பிரச்சினையைக் குறிப்பாக அண்மையில் கைச்சாத்திடப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை சுமுகமான முறையில் அமுலாக்க வழி வகுக்கும் என்பதில் வாக்காளர்கள் பெரிதும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ராஜா சினிமா
(சுழிபுரம்)
கல்யாணகுமார்-தேவிகா
நடிக்கும்
நெஞ்சம் மறப்பதில்லை

REGAL — JAFFNA
NOW SHOWING
SIMONE SIGNORET
IN M. C. M'S
The Day And The Hour
(Cinemas cope)

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 483
மனோகர்-பண்டரிபாய்
நடித்த
புனிதவதி

4-வது மகத்தான வாரம்!
சிங்கிலி பிளாஸா விஜயா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (மட்டக்களப்பு)
வெலிங்டன் விஜிதா
(யாழ்ப்பாணம்) (அட்டன்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பக்தியை மூட்டி,
தெய்வத்தின்
நிலை அடைந்து
தமிழர் உள்ளத்தில்
வாழும் - பட்டினத்தார்



பிரபல
பின்னணி பாடகர்
டி. எம்.
சௌந்தரராஜன்
எம். ஆர். ராதா
ஜெமினி சந்திரா
எஸ். ராமராவ்
எஸ். டி. சுப்புலக்ஷ்மி
எஸ். ஆர். ஜானகி
நடித்த
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன் கே. சோமு:

வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய் 22-12-64

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துககள், 6-45 திரை இசை,

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-00 'மத்தாப்பு'— தயாரிப்பு "சானா", 7-30 திசைகண்ட இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப பாடல்கள், 7-30 இசைக்கோவை பாட்டு — ஏ. ஜி. சுப்பிரமணியம், 7-45 ரேடியோ செய்திமலர்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை, 2-10 வீணை — விமலா வெங்கட்ராமன், ஜி. ரங்கராஜன், 2-40 பொன்னி ஒளிர் பாரதம் — தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 பாட்டு — ஆர். ராஜலக்ஷ்மி, 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 கவிதை நாடகம் — அலையின் தாகம், 7-45 பாட்டு — மாயூரம் சவுராஜன், 8-45 மெல்லிசை — பாடியவர் எல். கணபதி பிள்ளை, 9-30 முன்னேற்றப் பாதை — சித்திரம், 9-45 சிதார், 10-00 பாட்டு — ஆர். ராஜலக்ஷ்மி.

குரும்பசிட்டி வெற்றி

குரும்பசிட்டி, திங்கள்

சுன்னாகம் ஜெக்கெட் கோஷ்டிக்கும், குரும்பசிட்டி உதயதாரகை கோஷ்டிக்குமிடையே குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழக ஆதரவில் பலாலி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் குரும்பசிட்டி கோஷ்டி 3-2 கோல்களால் வெற்றிபெற்றனர். இடைவேளைக்கு முன்னர் சுன்னாகம் கோஷ்டி தனது இடது உட்புறவீரர் நரேந்திரன் மூலம் கோல் ஒன்றைப் போட்டுக்கொண்டது. இவ்வேளையில் ஆட்டம் தனது உச்சநிலையை அடைந்தது. குரும்பசிட்டி கோஷ்டியினர் சார்பில் யோகலிங்கம் மற்றைய முன்னணிவீரர்களின் உதவியுடன் இரு கோல்களை அடுத்தடுத்துப் போட்டார். இடைவேளையின் போது கோல் எண்ணிக்கை 2-1ஆக இருந்தது.

இடைவேளைக்குப் பின்னர் சுன்னாகம் கோஷ்டியினர் பனல்டி மூலம் வெகுசுலபமாக மேலுமொரு கோலைப் பெற்றுக் கொண்டனர். போட்டி முடிவடைவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்பு குரும்பசிட்டி வீரர்கள் பலத்த தாக்குதல் போட்டு லோகதாஸன் மூலம் ஒன்றை அடித்துக்கொண்டனர். இறுதியில் குரும்பசிட்டி தமது எதிர்க்கோஷ்டியை ஒரு கோலினால் தோற்கடித்தது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி, திங்கள்

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழக அமைப்பின் கீழ் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடாத்தப்பட்டுவரும் உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியில் சனி, ஞாயிறு நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகத்திற்கும் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற முதற்பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் அளவெட்டி கோஷ்டி 7-0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. விநாயகரத்தினம் இப்போட்டிக்கு மத்தியஸ்தம்வகித்தார்.

மயிலிட்டி தெற்கு ஜொலி ஸ்டார்ஸ் முதற் பிரிவுக் கோஷ்டிக்கும் குப்பிளான் விக்னேஸ்வரா 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும் மத்தியில் நடந்த ஆட்டம் இரு கோஷ்டிகளும் தலா இரு கோல்களைப் போட்டுக்கொண்டமையால் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

தையிட்டி ஸ்டார்ஸ் இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்கும் கட்டுவன் பாலர் ஞானோதய இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல் அடித்துக்கொண்டன. ஆட்டம் சரிசமனாக முடிந்தது. இப் போட்டிக்கு திரு. பஞ்சலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

திருவெம்பாவை நிறைவு விழா

கொழும்பு, திங்கள்

உணுப்பிட்டி-வத்தளை இந்து சன்மார்க்க சங்கத்தின் ஆதரவில் நேற்று மாலை, இ. த. க. பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ஆ. செ. ஆறுமுகம் தலைமையில் திருவெம்பாவைநிறைவுவிழா நடைபெற்றது. பலரின் சொற்பொழிவுடன், வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

குலரத்தினவுக்கு சமசமாஜ ஆதரவு

கொழும்பு, திங்கள்

பொதுத் தேர்தலில் அம்பலாங்கொடைத் தொகுதியில் திரு. பி. டி. எஸ். குலரத்தினவை ஆதரிப்பதாக லங்கா சமசமாஜக்கட்சியின் அம்பலாங்கொடைக்கிளை அம்பலாங்கொடைத் தொகுதி முன்னாள் எம். பி. யான திரு. குலரத்தினவுக்கு உறுதியளித்துள்ளது.

பழமையான கடிகாரம்

உப்பர்டால், டிச 21

உலகிலேயே மிகவும் பழமையான கடிகாரம் மேற்கு ஜெர்மனியிலுள்ள உப்பர்டால் கடிகாரப் பொருட்காட்சிச்சாலையில் இருக்கிறது. 1088ம் ஆண்டில் சீனாவில் தயாரிக்கப்பட்ட இக்கடிகாரம் 876 ஆண்டுகளாகியும் இன்னும் சரியாக ஓடிக்கொண்டிருக்கிறது. இக்கடிகாரம்பிரம்மாண்டமானது. இதை மேற்கு ஜெர்மன் கடிகார நிபுணர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு பழுது பார்த்து இந்தப் பொருட்காட்சிக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். அதுமுதல் இது நேரந்தவறாமல் ஓடிக்கொண்டிருக்கிறது

பயங்கரப்படங்களை பார்ப்பதில் ஆர்வம்

ஹாம்பர்க (டாட்) டிச.21

விநோதமும், பயங்கரமான இலக்கியங்களையும், படங்களையும் ரசிப்பதில் மேற்கு ஜெர்மனியர் இப்பொழுது அதிக ஆர்வம் காட்டிவருகிறார்கள். மர்மநாவல்கள் பெருமளவில் விற்பனையாவது போல், பயங்கரமான படங்களும் ஏராளமாக விற்பனையாகிவருகின்றன. பார்த்தவுடன் அச்சமூட்டும், ஓவியங்களின் புகைப்படங்கள் ஆகியவற்றை கண்காட்சிகளில் ஜெர்மானியர் வெகுவாக விரும்பிப் பார்க்கிறார்கள். அண்மையில் நடந்த "வினோதப் புகைப்படக் காட்சி"யில், சம்மட்டியின் அடியில் அழகி, தனது பிணத்தின் மேலே நடக்கும் மனிதன், மரக்கிளையில் தொங்கும் பெண்கள் ஆகிய நடுங்க வைக்கும் புகைப்படங்கள் அனைவர் கவனத்தையும் வெகுவாகக் கவர்ந்தன. மனதை நடுங்க வைக்கும் இப்புகைப்படங்களை மூனிச் நகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் எடுத்திருந்தார்.

திருகோணமலை நகராண்மைக் கழகம்

அசைவுள்ள பொருட்களின் விற்பனவு

சோலைவரி நிலுவை அறவிடும் பொருட்டு, நகரசபைகள் சட்டத்தின் (அத்தியாயம் 255) 170 (1) ஆம் பிரிவிற்கிணங்க மாநகரசபைகள் சட்டத்தின் (அத்தியாயம் 252) 252 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திருகோணமலை நகராண்மைக் கழகத் தலைவர் பிறப்பித்த ஒரு பற்றுணையின் மீது பறிமுதல் செய்யப்பட்ட கீழ்க்காணும் அசையும் பொருட்கள் யாவும், 1964 டிசம்பர் 28-ம் தேதி திங்கட்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் (அதற்கிடையில் வரித் தொகைகளும், செலவினங்களும் செலுத்தப்படாவிடில்) திருகோணமலை நகராண்மைக் கழக மண்டபத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

சி. சிவானந்தம்
தலைவர்,
நகராண்மைக் கழகம்,
திருகோணமலை.

நகராண்மைக்கழகப் பணிமனை,
திருகோணமலை,
19 டிசம்பர் 1964.

பொருட்களின் விபரம்

1. தேங்காய் (மட்டையுடன்) No. [——56
2. மர [வாங்கு (4 1/2 அடி நீளம்) ——1

1231

வரி விளம்பரம்

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணநாதர்
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

வாடகைக்கு

மின்சார, தண்ணீர் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: 7/2, இரண்டாம் கட்டை ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 1844

சுறுசுறுப்பான குழந்தைகள்

பான், டிச. 21

குழந்தைகள் சுத்தமாகவும சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டுமென மேற்கு ஜெர்மனியிலுள்ள பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புகிறார்கள். "குழந்தைகள் எவ்விதமிருக்க வேண்டுமென பெற்றோர்கள் விரும்புகிறார்கள்" என்பது குறித்து நடந்த ஆராய்ச்சியின்போது இத்தகவல் தெரியவந்தது. பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிபவர்களாக குழந்தைகள் இருக்க வேண்டுமென்பது 25 வீதமானோரின் விருப்பம். குழந்தைகளைப் பெற்றோர்களே வளர்க்க வேண்டும் என பெரும்பாலான ஆண்கள் விரும்புகிறார்கள். ஆனால் பெண்களின் கருத்து இதற்கு மாறாக இருக்கிறது.

தமது அபேட்சகர்கள் பற்றி தகநாயக்கா விளக்கம்

கொழும்பு, திங்கள்

அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்களைத் தோற்கடிக்கக் கூடிய வாய்ப்புள்ள எதிர்க்கட்சி அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு தமது கட்சி எந்த அபேட்சகரையும் நிறுத்தமாட்டாது என்று லங்கா பிரஜா தந்திரக் கட்சியின் தலைவர் டாக்டர் டபிள்யு. தகநாயக்கா தெரிவித்துள்ளார்.

சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான வாக்கெடுப்பின் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அரசாங்கக்கட்சியிலிருந்தே வாக்களித்த பதினான்கு எம். பிக்களுக்கும் எதிராக தமது கட்சி அபேட்சகர்களை நிறுத்தப்போவதில்லையென்றும் டாக்டர் தகநாயக்கா கூறினார்.

தாம் காலியில் போட்டியிடுவது நிச்சயமென்று கூறிய திரு. தகநாயக்கா அக்மீமனைத்தொகுதிக்கு அபேட்சகர் நிறுத்துவது பற்றி ஆலோசனை செய்து வருவதாகவும் சொன்னார்.

'ஐ. நா. விலிருந்து காஷ்மீரை விலக்கமுடியாது'

இந்திய மந்திரி உறுதி

புதுடில்லி, டிச, 22

ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து காஷ்மீர் விஷயத்தை விலக்கிக் கொள்ளும் யோசனை இந்தியாவுக்குக் கிடையாது என்று இந்திய வெளியுறவு ராஜாங்க மந்திரி திருமதி மேனன் இன்று தெரிவித்துள்ளார்.

லோகசபையில் இன்று அங்கத்தவர் ஒருவர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தான் திருமதி மேனன் மேற்கண்டவாறு கூறினார். காஷ்மீர் விஷயத்தை ஐ. நா. வில் தொடர்ந்து வைத்திருப்பதால் பலன் ஒன்றும் இல்லை என்றும் ஆகையினால் காஷ்மீர் விஷயத்தை ஐ. நா. விலிருந்து விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும் அங்கத்தவர்கள் கூறினர்.

இதற்கு திருமதி மேனன் பதிலளிக்கையில், உலக நாடுகள் சபையில் ஒரு பிரச்னை கொண்டு செல்லப்பட்டால் அதை திரும்பப்பெறும் நோக்கம் கிடையாதென்றும் இந்தப் பிரச்னையை விலக்கிக் கொள்ள வேண்டுமென்றால் ஐ. நா. விலிருந்து இந்தியா வெளியேறுவதே ஒரே வழி என்றும் கூறினார்.

"காஷ்மீர் தகராறு ஐ.நா.வில் இருப்பதால்தான் பாகிஸ்தான் இந்திய உறவு மோசமாகிறது என்பதில் அர்த்தமில்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் இந்திய-பாகிஸ்தான் தகராறுகளை தீர்க்க முடியும் என்பதில் இந்தியாவுக்கு நல்ல நம்பிக்கை உண்டு" என்றும் அவர் குறிப்பிட்டார்.——

யு. என். பி. அபேட்சகர்கள்

வியாழக்கிழமை இறுதி முடிவு

கொழும்பு, திங்கள்

ஐக்கிய தேசியக்கட்சியின் காரியக்கமிட்டி அடுத்த வியாழக்கிழமை கூடவிருக்கிறது.

அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறி அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு வாக்களித்த எம். பி. க்களுக்கு எதிராக அபேட்சகர்களை நிறுத்துவதா இல்லையா என்பது பற்றி காரியக்கமிட்டி அன்று முடிவு செய்யும். இந்தத் தொகுதிகளில் ஐக்கிய தேசியக்கட்சியை வளர்த்த இருபத்தைந்து அபேட்சகர்களின் பட்டியல், அங்கு அபேட்சகர்களை நிறுத்துவது இல்லையெனத் தீர்மானித்தால் மாற்றியமைக்க நேரிடும்.

சுரங்க வெடி விபத்தில் 60பேர் மாண்டனர்

லிமா, டிச. 21

பேருவின் தலைநகரான லிமாவிலிருந்து 125 மைல் தூரத்திலே இன்று ஏற்பட்ட நிலக்கரி சுரங்க வெடி விபத்தில் சுமார் 60 பேர் மாண்டனர் என்றும் ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெடிவிபத்தில் 52 பேர் மாண்டனர் என்று முதலில் வெளியான செய்திகள் கூறின.

வெடிவிபத்து ஏற்பட்ட பல மணி நேரம் கழித்தும் இந்தப் பகுதியில் பயங்கர சத்தம் கேட்டுக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தமிழரசு அபேட்சகர். .

(1-ம் பக்க தொடர்ச்சி)

வி. ஏ. அழகக்கோன் நிந்தாவூர்-முடிவில்லை.

கிளிநொச்சி-திரு. எம் திருச்செல்வம் (இவர் சுகவீனமுற்றிருப்பதால் வைத்திய ஆலோசனையின் பின்னரே இவர் போட்டியிடுவது பற்றி முடிவு செய்யப்படவிருக்கிறது. இவர் போட்டியிட முடியாதபட்சத்தில் திரு கா. பொ. இரத்தினம் அல்லது திரு. அன்டன் பொன்னம்பலம் ஆகிய இருவரில் ஒருவரை அபேட்சகராக நிறுத்துவது என யோசிக்கப்பட்டுள்ளது.)

குழந்தைகளுக்கு இரகசியப் பரிசு

ஹாம்பர்க் டிச, 21

ஒவ்வொரு ஆண்டிலும் டிசம்பர் மாதம் 6-ம் திகதி இரவில் புனிதர் நிக் யாருக்கும் தெரியாமல் வீடுதோறும் வந்து குழந்தைகளுக்கு ஆப்பிள் சாக்லேட் முதலிய பரிசுப் பொருள்களை கதவு அருகில் வைத்துவிட்டுச்செல்வதாக ஐரோப்பியநாட்டு மக்கள் நம்புகிறார்கள். புனிதர் நிக் வயதானவர்; நீண்ட தாடியுடையவர்; சிவப்பு நிற அங்கி அணிந்தவர் 'நல்ல' குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்களும் 'கெட்ட' குழந்தைகளுக்கு செருப்பில் மிலாறுகளும் இவர் கொண்டுவருவதாக நம்புகிறார்கள். இந்த ஆண்டிலும் குழந்தைகளுக்கு இத்தகைய பரிசுகள் கிடைத்தன.

மரண அறிவித்தல்

நீர்வேலி வாசரும் காங்கேசன்துறை "சீமெந்து" தொழிற்சாலையின் "பக்கிங் பிலாண்ட்" மேற்பார்வையாளருமாகிய க. பஞ்சாட்சரம் அவர்கள் 21-12-64 திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 22-12-64 செவ்வாய்க்கிழமை காலை நீர்வேலியில் நடைபெறும். 1849

குமாரசாமியை நிறுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

கிளிநொச்சி தொகுதியில் முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசாமியையே தமிழ் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தவேண்டும் என்று தலைமை பீடத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம், நேற்று நடைபெற்ற மீசாலை தமிழ்க் காங்கிரஸ் கிளைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

திரு இ கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் மபா. சிற்றம்பலம், இ. பரமேஸ்வரன் ஆகியோர் இத்தீர்மானத்தை ஆதரித்து பேசினார்கள் திரு. குமாரசாமி கிளிநொச்சி தொகுதி அபேட்சகராக முன்வந்தால் அவரின் கட்டுப்பணத்தை வாலிப முன்னணி கட்டுவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வரியிறுப்பாளர் சங்கம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராம சபை வரியிறுப்பாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் வழக்கம்பரை அம்மன் கோவில் வீதியில் நடைபெற்றது. சுழிபுரம் கிராம சபையினர் கடந்த மூன்று வருடங்களாக வரியை அறவிடாது எல்லாவற்றையும் ஒருங்கு அறவிட முற்படுவதால் பொது மக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள் என்பதை பண்டிதர் த. சுப்பிரமணியம், ச. சமூர்த்தி, அ. வீரசிங்கம் ஆகியோர் விளக்கிப்பேசினார்கள். வரி அறவிடுவதில் ஏற்பட்ட காலதாமதம் பற்றி திரு ச. தம்பையினார் எடுத்துவிளக்கினார். மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சுழிபுரம் கிராம சபையினருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. திரு. அ. தையல்பாகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதிய உத்தியோகஸ்தர்கள்:- தலைவர்; அ. தையல்பாகர் ஜே. பி., உபதலைவர் ச. சம்பந்தமூர்த்தி, காரியதரிசி: அ. வீரசிங்கம், தனாதிகாரி: நா. முருகேசு, நிர்வாக சபை உத்தியோகத்தர்: சி. பரமலிங்கம், த. சுப்பிரமணியம், இ. ஆறுமுகம், வே. சேதுகாவலர், மு. கார்த்திகேசு, ச. தம்பையா, மு. கணபதிப்பிள்ளை.

மொரீஷியஸுக்கு சுதந்திரம்

லண்டன், டிச. 21

மொரீஷியஸ் தீவுக்கு கூடிய சீக்கிரம் சுதந்திரம் அளிக்க பிரிட்டன் தயாராக இருப்பதாக, தாம் அங்கே நடத்திய பேச்சுவார்த்தைகள் மூலம் நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாய் மொரீஷியஸ் பிரதமர் கூறினார். 1810ம் ஆண்டில் மொரீஷியஸ் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டது.

கட்டுப்பணம் கட்ட பொதுமக்கள் தயார்

சுழிபுரம், திங்கள்

வட்டுக்கோட்டை தொகுதியில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் கட்சிக் காரியதரிசி திரு அ. அமிர்தலிங்கத்தின் தேர்தல் கட்டுப்பணத்தை இப்பகுதியிலுள்ள பொதுமக்கள் கட்ட முன்வந்துள்ளனர். கட்டுப்பணத்தைச் சேர்க்கும் முயற்சியில் இப்பகுதியிலுள்ள வாலிபர்கள் அதிகம் ஈடுபட்டுள்ளனர். குறிக்கப்பட்ட தொகையிலும் மேலதிகமாக பணம் சேர்ந்துள்ளதாகவும் ஆதரவாளர்களிடம் இருந்து தலைக்கு ஒரு ரூபாவுக்கு அதிகப் படாமல் பணம் சேர்ப்பதாகவும் தெரியவருகின்றது. மற்றும் பல பொது ஸ்தாபனங்கள் கட்டுப்பணத்தைக் கட்டுவதற்கு முன்வந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

"தொகுதிக்கும் மொழிக்கும் உழைக்க முன்வந்துள்ளேன்"

வரவேற்பு கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்

யாழ்ப்பாணம், செவ்

'கடந்த எட்டு வருட காலமாக சாவகச்சேரி தொகுதி எதுவித முன்னேற்றமும் அடையவில்லை. நமது தொகுதியில் வேலையில்லாத்திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. தமிழ்மொழி சீரழிந்துவருகிறது. எங்கள் தொகுதியை முன்னேற்றவும், இத் தொகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான படித்த வாலிபர்களுக்கு அரசாங்கத்திலும் தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் வேலை தேடிக் கொடுக்கவும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் தமிழ் மொழியின் உரிமையைப் பெறுவதற்காகவுமே இத் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராக போட்டியிட முன்வந்துள்ளேன் என்று மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலில் நேற்று மாலை ஆதரவாளர்கள் மத்தியில் சாவகச்சேரி தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு. சிவானந்தம் பேசும்போது கூறினார்.

தென்மராட்சி காங்கிரஸ் வாலிபமுன்னணி தலைவர் திரு. க. கனகரத்தினம் மீசாலை பிள்ளையார் கோயில் வாசலில் திரு. சிவானந்தனை வரவேற்றார்.

திரு. சிவானந்தனின் கட்டுப்பணத்திற்கு, அங்கு குழுமியிருந்தவர்கள், பண உதவி யளித்தார்கள்.

"பாகிஸ்தான் நடவடிக்கை பழிவாங்கும் செயல்"

இந்தியா ஆட்சேபம்

கராச்சி, டிச 21

கராச்சியிலுள்ள இந்திய ஹைகமிஷன் 2-வது காரியதரிசி திரு. ஜோஷியை விரும்பத்தகாதவர் எனக் கூறி அவரை வெளியேற்ற பாகிஸ்தான் எடுத்த நடவடிக்கை குறித்து மறுப்புக்கூறும் ஆட்சேப குறிப்பு ஒன்றை இந்திய ஹைகமிஷனர் பாகிஸ்தான் வெளிநாட்டு இலாகாவிடம் வழங்கினார்.

இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷன் 2-வது காரியதரிசி திரு குலாம் முகம்மது உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாய் வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டதற்கு வழி காட்டுமுகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாய் ஆட்சேபக் குறிப்பு கூறுகிறது

திரு. குலாம் முகம்மது வேவு நடவடிக்கையிலீடுபட்டதற்கு வலுவான முகாந்திரம் இருப்பதாயும் குறிப்பு கூறுகிறது.

கண் பார்வை அற்றவர்கள்

கொழும்பு, திங்கள்

இலங்கையில் கண்பார்வை இழந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுக்க கம்பகா கண்தான சங்கம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

வெளிநாட்டு சஞ்சிகைகள் மீது கண்காணிப்பு

கொழும்பு, திங்.

இலங்கையில் இறக்குமதியாகும் வெளிநாட்டுச் சஞ்சிகைகள் மீது மிகவும் கண்காணிப்பாக இருக்க சுங்க இலாகா அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இங்கு இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு சஞ்சிகைகள் பக்கம்பக்கமாகப் பார்வையிடப்படவிருக்கிறது.

இலங்கை பற்றி தவறான தகவல்கள் அல்லது கார்ட்டூன் படங்கள் இடம்பெறும் சஞ்சிகைகள் இங்கு விநியோகிக்கப் படாதவாறு தடைப்படுத்தப்படும்.

கல்கத்தாவில் சாஸ்திரி

கல்கத்தா, டிச. 21

சாதாரண மனிதனின் வாழ்வை மேம்படுத்துவதே 4-ம் திட்டத்தின் நோக்கமாயிருக்கவேண்டும் என இந்தியப் பிரதமர் சாஸ்திரி கூறினார்.

"10 வருடத்தில் குறைந்தபட்சம் வாழ்க்கை வசதிகள் மக்களுக்கு இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். திட்டத்தில் மூன்றில் ஒரு பகுதி முதலீடு தனியார் துறைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதால், அவர்கள் முக்கியபங்கு ஆற்றவேண்டும்." நாடு முன்னேற்றப்பாதையில் ஒவ்வொரு அடியிலும் சிரமத்தை எதிர்நோக்கியிருக்கிறது" என்றும் அவர் கூறினார்.

திரு சாஸ்திரி இன்று டில்லியிலிருந்து கல்கத்தா வந்தார், பின் சாந்திநிகேதன் சென்றார்.

இளம் பெண் தற்கொலை

கிளிநொச்சி, திங்கள்

துன்னாலையைச் சேர்ந்த 20 வயது இளம் பெண் மணியம்மா என்பவர் தனது கணவன் தன்னை கன்னத்தில் அடித்ததன் காரணமாக மனவருத்தத்தில் கிருமிநாசினி அருந்தி கிளிநொச்சியைச் சேர்ந்த அக்கரையான் என்னுமிடத்தில் தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணை அதிகாரி திரு மு. யோகலிங்கம் மரணவிசாரணை நடத்தினார். விசாரணை முடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

நாடக அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், செவ்.

பாஷையூர் உதய சூரியன் நாடக மன்றத்தின் சார்பில் திரு. "டோல்கி" மனுவலின் தயாரிப்பான 'மங்கல மங்கை' என்னும் நாடகம் யாழ்ப்பாண மீன்பிடி இலாகா அதிபர் திரு. ஏ. பிலிப் தலைமையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை பாஷையூர் அந்தோனியார் பாடசாலையில் அரங்கேற்றப்பட்டது.

வாலிபன் தற்கொலை

கிளிநொச்சி, திங்கள்

தவறணை கொந்தராத்துக் காரரான சிவசம்புவின் மகன் தவராசா என்னும் 26 வயது வாலிபன் அரசாங்க காட்டுக் கமத்தில் நச்சுத்திராவகம் அருந்தி மரணமானார். இதுசம்பந்தமாக விசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் அந்தக் காட்டுக் கமத்தில் வேலை செய்யும் சின்னத்தம்பி காசிநாதன் என்பவரை விசாரணை செய்தபொழுது நச்சுத்திராவகத்தை பாதுகாப்பில்லாத இடத்தில் வைத்ததற்கு எச்சரிக்கை செய்தார். இறுதியில் தற்கொலையென தீர்ப்பளிக்கப்பட்டது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்
யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்தி
லுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர்
மாதம் 22-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.